கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

# CC.No. 25 / 2023

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 04- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரத்குமார் | வயது | 31 |
| தந்தை பெயர் | வீரமணி | ஜாதி | |
| தொழில் | ஓட்டுனர் | மதம் | |
| ஊர் | குமாரமங்கலம் | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது குமாரமங்கலம் ஆதிதிராவிடர் தெருவில் வசித்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா 1 யை எனக்கு தெரியும், எனது தெருக்காரர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களும் எனது தெருவை சேர்ந்தவர்கள். அ.சா 1 க்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலிஸ் விசாரணையில் கடந்த 14.03.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் அ.சா 1 மட்டும் வீட்டில் இருக்கும் போது ஆஜர் எதிரிகள் அ.சா 1 யை கர்பிணி என்றும் பாராமல் தகாத வார்த்தைகளால் திட்டி அ.சா 1 ன் கையை பிடித்துக் கொண்டு ஆஜர் 1 வது எதிரி வயிற்றில் உதைத்தும், ஆஜர் 2 வது எதிரி அ.சா 1 ன் தலையை பிடித்து சுவற்றில் மோதியதில் அவர் மயக்கம் ஆகிவிட்டார் என்றும், அதை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும், போலிஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்தினால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரண- இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court, Tiruvarur.